REGD. No. M. 6311

PHONE No: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 269

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY! THE OFFICIAL ORGAN OF: THE D.F.F

சென்னை: சித்திரை 14உ திங்கள் (26—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 15உ செவ்வாய் (27—4—54)

கள்ளப் பொருள் கைப்பற்றப்பட்டது

பொன் முலாமிட்ட கடிகாரம் ஆயிரம், பேனா 500, சிகெரெட் தாங்கி 500, அமெரிக்கப் பட்டு 500 கெஜம்

பாக். தூதுவர் அலுவலக ஊழியருக்கு சிங்கப்பூரில் இருந்து வந்ததாம்

கல்கத்தா கடற்சுங்க அதிகாரிகள் தகவல்

பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புடைய கைகடிகாரம், பவுண்டன் பேனா, சிகெரெட் ஹோல்டர், அமெரிக்க பட்டுத் துணி முதலியன ஒரு 'ரேபிரி ஜரேடரில்' பத்திரமாக வைத்து, சிங்கப்பூரிலிருந்து ஒருவரால், கல்கத்தாவில் உள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் அலுவலகத்தில் ஊழியம் செய்யும் ஒரு பாக் குடிக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்பொருட்களை கல்கத்தாவில் உள்ள யூனியன் சர்க்கார் கடற்சுங்க அதிகாரிகள் சோதித்துக் கைப்பற்றி தங்களிடம் வைத்துள்ளனர். அதுபற்றி மேல் விவரம் கூற சுங்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

பாக் ஹைகமிஷனரான குலாஜா நாசபோலா, தமது அலுவலகத்தில் வியாபாரத் துறையினராக உள்ள எஸ். எம். அலி என்பவர், கைப்பற்றப்பட்டுள்ள பொருட்களை அனுப்புமாறு சிங்கப்பூரில் எந்த வியாபாரிக்கும் உத்திரவிட்டது கிடையாது எனவும், அவர் அனுப்பவேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளபொருட்களுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது எனவும் கூறினார்,

சர்க்கரை கட்டுப்பாடு

மீண்டும் வருமா?

லட்சுமணபுரி, ஏப் 23—

சர்க்கரை விலை உயர்வைத் தடுப்பதற்கு இந்திய சர்க்காரும், உ. பி. சர்க்காரும் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகளில் சர்க்கரைமீது மீண்டும் கட்டுப்பாடு விதிப்பதும் ஒன்றாகும் என்று உ. பி அசெம்பளியில் சிவில் சப்ளை மந்திரி தெரிவித்தார்.

4 நகரங்களில் தேசிய நூல் நிலையங்கள்

புதுடில்லி, ஏப். 24—

இந்தியாவில் நான்கு தேசிய நூல் நிலையங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாயும், அவை முறையே சென்னை, பம்பாய், டில்லி, கல்கத்தா ஆகிய நகரங்களில் ஏற்படுத்தப்படும் என்று மக்கள் சபையில் பிரதம மந்திரி தெரிவித்தார்

கல்லூரி அலுவலரைத் தாக்க மாணவர்கள் முயற்சி

— (:) —

கல்லூரியும் மூடப்பட்டது! தடை உத்திரவும் போடப்பட்டது!

தர்பங்கா, ஏப். 25—

இங்குள்ள சந்திரா தரணி கல்லூரியில் வேலை பார்த்துவந்த இரு ஆசிரியர்களை, கல்லூரி முதல்வர், வேலையிலிருந்து விலக்கி விட்டார். இச்செயலினால் ஆத்திரங்கொண்ட மாணவர்கள் கல்லூரி முதல்வரைத் தாக்க முயற்சித்தனர்.

மாணவர் கிளர்ச்சியின் காரணமாக கல்லூரி 20-ந் தேதி வரையில் மூடப்பட்டது. மீண்டும் கல்லூரி திறக்கப்பட்டதும், மாணவர்கள் கல்லூரிக்கு முன்னால், கல்லூரி செயற்குழுவைக் கலைக்க வேண்டுமெனவும், கல்லூரி பராமரிப்பை பீகார் பல்கலைக் கழகமே மேற்கொள்ள வேண்டுமெனவும் ஒலிகளை எழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்தனர்.

தர்பங்கா மாவட்ட மாஜிஸ்திரேட் நகரத்தில் 144 தடை உத்திரவை போட்டு இருக்கிறார். நகரின் முக்கியமான வல பகுதிகளிலும் ஆயுதம் தரித்த போலீஸ் படையினர் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளனர். இருந்தாலும் மாணவர்கள் கல்லூரி முன்கூட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர் எனத் தெரியவருகிறது.

இலங்கை சர்க்காரின் — — அதிசயப் போக்கு!

பிரதமர்கள் பொது நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டது

பாதுகாப்புத் தர இயலாததால் கூட்டங்களுக்குத் தடை?

கொழும்பு ஏப்: 25—

கொழும்பு மாநாடு ஏப்ரல் 28-ந் தேதி காலையில் ஆரம்பமாகும். இந்தியா, பாகிஸ்தான் பர்மா, இந்தோனேஷியப் பிரதமர்கள் ஏப் 27-ந் தேதி இங்கு வந்து சேர்வர்.

பிரதமர்களின் பொது நிகழ்ச்சிகள் பலவற்றை இலங்கை சர்க்கார் இன்று ரத்து செய்தது. ஏப். 30-ந் தேதி ஐந்து பிரதமர்களும் பேசவிருந்த பொதுக்கூட்டமும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஏராளமான மக்கள் கலந்துகொள்ளக்கூடிய இந்த நிகழ்ச்சிகளுக்குத் தகுந்த பந்தோபஸ்து ஏற்பாடு செய்ய இயலாது என்று இலங்கை சர்க்கார் காரணம் கூறுகிறது.

கம்போலா எஸ்டேட் தொழிலாளர் கூட்டத்தில் நேரு பேசவிருக்கிறார். இக்கூட்டமும் நடக்காது என்று தோன்றுகிறது. இலங்கை இந்தியர் காங்கிரஸ் மாநாடு நடக்கும்போது இந்தக் கூட்டத்தில் நேரு பேசினால் அதைக் காங்கிரஸ் அரசியல் ரீதியில் பயன்படுத்திக் கொள்ளும் என்றும், இதை இலங்கை சர்க்கார் விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

"தற்கொலைக் கொப்பான ஒப்பந்தம்"

அ. இ. முஸ்லிம் மாநாடு கண்டனம்

லட்சுமணபுரி, ஏப். 25—

"அமெரிக்கா—பாகிஸ்தான்—துருக்கி ஆகியவை செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள், ஆசிய நாடுகளை அமெரிக்காவும், மேற்கு வல்லரசுகளும் அடிமைப்படுத்துவது தவிர்க்க முடியாத விளைவென்றும், அவை ஆசியாவுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் விரோதமானவை என்பதுடன் அந்நாடுகளின் கூட்டு நல்வாழ்வுக்கே தற்கொலைக்கொப்பானது," என்றும் அகில இந்திய முஸ்லிம் மாநாடு ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அபாயகரமாகக் 'கார்' ஓட்டினதாக பெவான் மீது வழக்கு

பெண்கள் ஏறிவந்த 'பஸ்' மீது மோதினர்

ஆபத்து ஏற்படும் 'காரை' நிறுத்தாமல் ஓட்டிச் சென்றார்

பேகோன்ஸ்பீல்ட் ஏப். 24—

இங்கிலாந்து தொழிற் கட்சியின் இடதுசாரி தலைவரான அனூரின் பெவானுக்கு, அபாயம் விளைவிக்கும் வகையில் 'கார்' ஓட்டிச் சென்றதாகவும், பெண்களை ஏற்றிவந்த 'பஸ்' ஒன்றின் மீது காரை மோதினதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு, நீதிமன்ற 'சம்மன்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜெரார்ட்ஸ் சந்திப்பில் இத்திங்கள் 23-ந் தேதி பெவான் ஓட்டிச்சென்ற கார், 35 பெண்களை ஏற்றிவந்த மோட்டார் கோச் ஒன்றின் மீது மோதியதாகவும், சம்பவம் நடந்த பிறகு காரை நிறுத்தி சம்பவத்தைப் போலீசுக்கு அறிவிக்க வேண்டுமென்ற மரபையும் மீறினதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாக, பேர்லின் அறிக்கை ஒன்று விளக்கம் தருகிறது.

வருகிற மே திங்கள் 4-ந் தேதி வழக்கு பெகோன்ஸ் பீல்ட் மாஜிஸ்திரேட் முன்னிலையில் நடைபெற இருக்கிறது.

நியூயார்க் நகரில், தினந்தோறும் 109 கோடி காலன் குடிதண்ணீர் செலவாகிறது; அந்நகரின் மக்கள் தொகை கணக்குப்படி பார்த்தால், ஒரு தனி மனிதனுக்கு 136 காலன் (340 படி) தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது.

ரஷ்யா-ஆஸ்திரேலிய ராஜதந்திரிகள்

தாயகம் திரும்புகையில் தஸ்தாவேஜுகள் தீக்கிரை

கான்பெர்ரா, ஏப். 24—

மாஸ்கோவிலுள்ள ஆஸ்திரேலிய ராஜதந்திரிகளும், கான்பெர்ராவிலுள்ள ரஷிய ராஜதந்திரிகளும் தங்கள் தாயகத்துக்குத் திரும்புவதற்குத் தயாராகுகையில், இரு இடங்களிலுள்ள ஸ்தானிகராலயங்களிலும் தஸ்தாவேஜுகள் தீக்கிரையாயின,

கான்பெர்ராவிலுள்ள ரஷியர்கள் தங்கள் செங்கொடியை இறக்கி ஸ்தானிகராலய இரும்பு கேட்டுகளை மூடிவிட்டார்கள்; அதே நேரத்தில் புகைக்கூண்டு ஒன்றிலிருந்து புகைப் படலம் வெளியே வந்தது.

மாஸ்கோவிலிருந்து ஆஸ்திரேலிய ஸ்தானிகர் வெளியேறுவதற்கு ரஷ்யா இடையூறு செய்வதாக அறிவிக்கப்படுகிறது.

சவத்தைப் புதைக்கவும்

புதிய கல்வித் திட்டம் உதவாக்கரை!

உடனே ஒழித்துக் கட்டுக!

ஒரு காங்கிரஸ் வார இதழ் பின்வருமாறு எழுதுகிறது:—

"ராஜாஜியின் கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்றால், தமிழ்நாடெங்கும் ஒரு பெரும் கிளர்ச்சி நடந்துவிடுமென்று சின்ன அண்ணாமலை உறுமுகிறார். ராஜாஜியின் கல்வித் திட்டம் சர்க்கார் தஸ்தாவேஜிகளில் வேண்டுமானால் இன்னமும் இருக்கலாம். அந்தத் திட்டம் உதவாக்கரையாகி, செத்துச் சுடுகாடாகி, கிராமந்தோறும் துர்க்கந்தம் வீசிக் கொண்டிருக்கிறது. இந்தச் சவத்தை உடனே அப்புறப்படுத்தாவிட்டாலும், தர்காற்றம் விசாரபடி குழிப் பாட்டியாவது வைக்க வேண்டியதுதான் இப்போதைக்குள்ள வேலை,"

'ஹனுமான்'; 25—4—54.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 26—4—54 திங்கள்

அறுதலிக்கு அதிருஷ்டம்

ஆம்! விதவைகளைத் தேடிக்கொண்டு புது வாழ்வு விரைகிறது! கைம்பெண்களின் எண்ணிக்கை, இனி நாள் செல்லச் செல்லக் குறைவது திண்ணம்!

இந்து சமுதாயத்தைப் போல இழிந்த நிலை பெற்றுள்ள, கொலைக்கஞ்சா கொடிய சமுதாயத்தை, உலகில் வேறு எங்கும் காண முடியாது. கணவன் இறந்தால், கட்டாயமாக அவன் பிணம் வேகடிக்கப்படும் தீயில் படுத்து வெந்து சாம்பலாக வேண்டிய கட்டாயம், இந்து மதத்தில் நீங்கலாக வேறு எந்த மதத்திலாவது பெண்களுக்கு இருந்ததுண்டா?

அவள் சாகத் தயங்கினாலும், அவளை வலுக்கட்டாயமாகத் தீயில் தள்ளிப் பொசுக்கி, மதக் கட்டளையை நிறைவேற்றி, ஆண்டவன் கோபத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக் கொண்டதாக மகிழ்ந்து களிக்கும் ஆண்களையும் பெண்களையும் கொலைஞர்களாகக் கொண்ட சமுதாயத்தை உலகில் இப்பாரத கண்டத்தில் தவிர, வேறு எங்காவது காண முடியுமா?

அந்த மனிதரிலே உத்தமர் ராஜாராம் மோகன் ராயின் அரிய முயற்சியினாலும், இடையறாத சலியா உழைப்பினாலும், லார்ட் வில்லியம் பெண்டிங்கின் அறிவுள்ளத்தினாலும் அல்லவா, கைம்பெண்களைக் கனல் மூட்டிக் கொளுத்தி மகிழும் கோரக் கொடுமை, சட்டத்தின் மூலம் அறவே ஒழிக்கப்பட்டது? அக்நல்வினையால் இந்து மதம் செத்தா போய்விட்டது? மனித குலம் புதைக் குழியில் புதைந்தா போய்விட்டது? அத்தகைய கேடுகள் ஒன்றும் நேர்ந்துவிடவில்லையே? மனிதப் பூண்டு இன்றும் புலபுலென மக்களைப் பெற்று, கலகலென சந்தடி செய்து வாழ்ந்து, வளர்ந்துகொண்டு தானே வருகிறது?

அடுத்தது இள மணத் தடை. ஆரிய கலாசார மதாசாரப்படி, இளம் பெண்களை, பூப்படைவதற்குள் தேவர்களாலும் மூவர்களாலும் கற்பழிக்கவிடாமல் காத்து நிறுத்துவதற்காக, அறியாப் பருவத்திலேயே மணம் முடித்துவிட வேண்டுமென இந்து வைதீகவெறியர்கள் பேயாட்டம் ஆடிவந்தனர். இளமையிலே தன்னை மணந்தவன் மண்ணோடு மண்ணாகிப் போனதால், மங்கைப் பருவம் பெற்றதும், பருவத்தின் சேட்டைக்கும் பலியாகி, ஆண் உலகின் அக்கிரமத்திற்கு இரையாகி, மானங்கெட்டு, சமூகப் பழிப்புக்கு அஞ்சி, தற்கொலை செய்துகொண்டு மடிந்தும், கொலைக்காரியாக மாறி கொடுமை சொட்டியும், விமோசனம் கிடைக்காதா என ஏங்கிக்கிடந்த வஞ்சியர்களுக்கு மீட்சி தர, விடிவெள்ளியென வந்தார் அரிவிலாச சாரதா என்ற நல்லறிவாளர்! இளமணத்தைத் தடுக்கச் சட்டமொன்றை இயற்றினர். சட்டத்தை எதிர்த்து சல்லடம் கட்டினர் சாஸ்திரிகளும், சடாவல்லபர்களும்! சனாதனம் படமெடுத்து ஆடிற்று! தேசிய முகமூடியில் புகுந்து கிடந்த பார்ப்பன ஏடுகள் பரணி பாடின! இந்துவுள்ளம் பெற்றிருந்த காங்கிரஸ் கனபாடிகளோ, மசோதாவை எதிர்த்து மார் தட்டினர்! தங்கள் அரசியல் வாழ்வில் பெற்ற செல்வாக்கைக் காட்டி சட்டத்தைச் சாய்க்கச் சதி செய்தனர்! காலஞ்சென்ற சென்னை காங்கிரஸ் வாய்ச்சவடால் அய்யரின் எதிர்ப்பு சண்டமாருதம் என இருந்தது!

இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தும், எப்படியோ இருமணத் தடைச் சட்டம் புத்தகத்தில் இடம் பெற்றுவிட்டது. அதனாலும் இந்து மதம் கெட்டுப் போய்விடவில்லை. அதை மசோதா நிலையில் எதிர்த்தவர் எவரும், அச்சட்டத்தால் ஏற்பட்ட நற்பலனை அனுபவிக்கத் தவறவுமில்லை; பின்னர் சட்டத்தைப் பாராட்டாமல் இல்லவுமில்லை.

டெல்லி மக்கள் சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு இருக்கிறது. நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் இருபத்தைந்து அல்லது அதற்குக் குறைவான வயதுடைய பெண்களை மணந்துகொள்வதற்குத் தடை விதிக்க வேண்டும் என்பதுதான் அம்மசோதாவின் நோக்கம். அத்தடையை மீறுகிறவர்களுக்கு 3 மாத சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் என்ற நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. அக்கிழவன்—குமரி மணத்திற்கு ஏற்பாடு செய்கிறவர்களையும், மணச் சடங்குகளைச் செய்யும் புரோகிதர்களுக்கும் அதே தண்டனை தரப்பட வேண்டுமெனவும் நிபந்தனை அறிவிக்கிறது.

சிறைத் தண்டனையும் போதாது; அபராதத் தொகையும் குறைவானதாகவே இருக்கிறது. இரண்டையும் கூட்டியாக வேண்டும்.

தண்டனையை அனுபவித்துவிட்ட பின்னர், அத்திருமணம் சட்டப்படி செல்லுமா செல்லாதா என்பதற்கான விவரம் தெரியவில்லை.

எது எப்படி இருந்தாலும், இம்மசோதா சட்டமாக்கப்படுவதின்மூலம் கிழவர்கள், தங்கள் சுகத்திற்காக இல்லையானாலும், வேறு எதற்காக வேண்டுமானாலும், வயதில் தனக்குச் சமமான கைம்பெண்ணையே தேடி மணப்பர் என்பது எதிர்பார்க்கக் கூடியதே யாகும்.

இம்மசோதா சட்டமானால், கைம்பெண்களுக்கு கதிமோட்சம் பிறப்பது கட்டாயத்திலும் கட்டாயமாகும் என்பது மூக்காலும் உறுதி. மசோதாவின் முழு விவரமும் கிடைத்த பிறகு மீண்டும் இதுபற்றி ஆராய்வோம்.

விபசாரத் தடை

விரிவான சட்டம் வரும்

புதுடில்லி, ஏப். 23—
மக்கள் சபையில் திருமதி. மணிபென் பட்டேலால் பிரேரபித்த விபசார தடை மசோதா ஒத்திப் போடப்பட்டது.

தேச முழுதுக்கும் பொருந்தக் கூடிய முறையில் விரிவான மசோதா ஒன்றை அடுத்த கூட்டத்தில் சர்க்காரே கொண்டு வருமென கட்ஜு வாக்குறுதி அளித்தார்.

மாதிரி நகல் மசோதா ஒன்றை மாநிலங்களின் அபிப்பிராயத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று அறிவித்தார்.

உணவு கலப்படம்

விரிவான சட்டம் வரும்!

புதுடில்லி, ஏப். 23—
உணவில் கலப்படம் செய்வோருக்கு தண்டனை விதிப்பது சம்பந்தமான ஜான்ஜன்வாலா மசோதா மீது விவாதம் மக்கள் சபையில் ஒத்திவைக்கப்பட்டது.

விரிவான ஒரு மசோதா மீது தனிக் கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதாகவும் அடுத்த கூட்டத்தொடரில் அது நிறைவேற்றப்படுமென்றும் சுகாதார மந்திரி தெரிவித்தார்.

காவலாளியே களவு செய்வதானால்......!

புதுடில்லி, ஏப். 23—
பெண்கள், குழந்தைகள் ஸ்தாபனங்களுக்கு லைசென்ஸ் வழங்குவது, அவைகளை சர்க்காரின் சட்டதிட்டங்களுக்கு உட்படுத்துவது சம்பந்தமான தமது மசோதாவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படி மக்கள் சபையில் திருமதி மணிபென் பட்டேல் பிரேரபித்துப் பேசுகையில், சில ஸ்தாபனங்கள் பெண்களையும் குழந்தைகளையும் கள்ளத்தனமாகக் கடத்தி வந்து அவர்களைப் பிச்சைக்காரர்களாக்கிவிடுவதாகக் கூறினர்.

பருத்தி உற்பத்தி

புதுடில்லி, ஏப் 24—
நடப்பு ஆண்டில், பருத்தி சாகுபடியின் திரணம் 1,62,66,000 ஏக்கராவும், உற்பத்தி 36,58,000 பேல்களுமாக இருக்குமென்று தெரியவருகிறது. 1952—53-ம் ஆண்டில் இந்த அளவுகள் முறையே 1,50,13,000 ஏக்கரும், 29,05,000 பேல்களுமாக இருந்தன.

1953—54-ல் மொத்தம் சுமார் 12 80,000 டன் பருத்தி விதை உற்பத்தியாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1952-53ல் மொத்தம் 10,18,000 டன் கிடைத்தது. இந்தக் கணக்குப்படி நடப்பு ஆண்டில் 2,62000 டன் அதிகமாகக் கிடைக்கக்கூடுமென்று தெரிய வருகிறது.

கோதுமை சாகுபடி

புதுடில்லி, ஏப் 25—
நடப்பு ஆண்டில், மொத்தம் சுமார் 2,38 10,000 ஏக்கராவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. 1952-53ம் ஆண்டில், கோதுமை சாகுபடியின் திரணம் 222,65,000 ஏக்கராவாக இருந்தது.

புளிச்சை நார் உற்பத்தி

புதுடில்லி, ஏப். 24—
நடப்பு ஆண்டில், சுமார் 4,73 000 ஏக்கராவில் புளிச்சை செடி பயிரிடப்பட்டிருப்பதாகவும் மொத்தம் சுமார் 7,16,000 சிப்பம் புளிச்சை நார் கிடைக்கக் கூடுமென்றும் தெரியவருகிறது. 1952-53ம் ஆண்டில், இந்த அளவுகள், முறையே 4 83,000 ஏக்கரும், 6 82,000 சிப்பங்களுமாக இருந்தன.

அடங்க மறுப்பவர்கள் 'காட்டுமிராண்டிகள்'

நேரு எடுத்துக்காட்டியுள்ள வரலாற்று உண்மை

"உலகம் முழுவதையும் ஒரு குடை நிழலில் ஆளுவது என்கிற எண்ணம் ரோமாபுரிக்கு மட்டுமே உரியது என்று சொல்வதற்கில்லை; பண்டைய சீனாவிலும் இந்தியாவிலும் இதையே காண்கிறோம். காஸ்பியன் கடல் கரையில் பரவியிருந்த சீன ராஜ்யம் ரோம சாம்ராஜ்யத்தை விடப் பெரிதாக இருந்ததென்றே சொல்ல வேண்டும்."

"சீனச் சக்கரவர்த்தி தெய்வக் குமாரன் (Son of Heaven) என்று அழைக்கப்பட்டார். அவர் உலக முழுவதிலும் ஒரு தனிச் செங்கோல் செலுத்தும் ஏக சக்கரவர்த்தி (Universal Sovereign) என்றே கருதப்பட்டார்; பல ஜாதியாரும் ஜனங்களும் அச்சக்கரவர்த்திக்குக் கீழ்ப்படாமல் தொந்திரவு கொடுத்து வந்தது வாஸ்தவமே; ஆனால், அவர்கள் எல்லோரும் 'காட்டுமிராண்டிகள்' என்று அழைக்கப்பட்டனர்—ரோமர்கள், வட ஐரோப்பியரை அழைத்ததுபோல!"

—உலக சரித்திரம்—ஆசிரியர்: ஜவஹர்லால் நேரு
மொழிபெயர்ப்பாசிரியர்: ஓ. வி. அளகேசன்

—நேரு சிறையிலிருந்த காலத்தில் தனது மகளுக்கு எழுதிய கடிதம் (34)—'உலக முழுவதையும் ஒரு குடை கீழ் ஆளும் கொள்கை'—ஏப்ரல் 25, 1932-ல் உள்ளது.

"ஆசியா போர்க்களம் ஆகக்கூடாது"

ஜப்பானுக்கு நேரு அழைப்பு

டோக்கியோ, ஏப். 23—
"ஒரு புதிய யுத்தத்தில் ஆசியா போர்க்களமாக மாறுவதைத் தடுப்பதில் ஜப்பானும், இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும்; அணு ஆயுதங்களைத் தடை செய்வதிலும் இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்; உலகம் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து கிடக்கையில் ஆசிய நாடுகள் ஐக்கியப்படுவது மிகவும் முக்கியமானது,"
—என்று, இங்குள்ள இந்திய ஸ்தானிகர் எம். ஏ. ரவூப் நேருவிடமிருந்து ஜப்பானிய மக்களுக்குக் கொண்டுவந்த செய்தியில் தெரிவித்தார்.

மலையேறும் முயற்சி

ஜப்பானியர் கைவிட்டனர்

காட்மாண்டு, ஏப். 24—
இமயத்தில் மன்சாலு சிகரமேறுவதற்காக முயன்று வரும் ஜப்பானிய குழுவினர் தங்கள் முயற்சியைக் கைவிட்டு விட்டார்களென தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவினர் முகாமிட்டிருந்த பகுதியிலுள்ள கிராமவாசிகளின் விரோத மனோபாவமே இதற்குக் காரணம்.

மன்சாலுவுக்கு வடகிழக்கேயுள்ள கணேஷ் சிகரத்தின் மீதேறுவதற்கு அனுமதி தருமாறு ஜப்பானிய குழுவினர் நேபாள சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளனர். இப்புதிய வேண்டுகோள் பற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

மணிக்கு 1,000 மைல்!

புதுரக சண்டை விமானம்

லண்டன், ஏப். 23—
பிரிட்டன் புதுரக ஜெட் சண்டை விமானம் ஒன்றை தயாரித்துள்ளதென்றும் இது மணிக்கு 1000 மைல் வேகம் செல்லக்கூடியதென்றும் ஒரு அமெரிக்க பத்திரிகையில் தகவல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

குன்னூர் தி. மு. கழகம்

21—4—54ல், குன்னூர் தி.மு. கழகக் கூட்டம் தோழர் காதர் மைதீன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசிய பின், தோழர் பாண்டியன் சொற்பொழிவாற்றினார்.

கிராமாதிகாரிகள் விசாரணை

சஸ்பெண்டு செய்ய அதிகாரம்

சென்னை, ஏப். 24—
"விசாரணையின்போது கிராமாதிகாரிகளை சஸ்பெண்டு செய்ய ஜில்லா கலெக்டருக்கும், ரெவினியூ டிவிஷன் ஆபீசருக்கும் அதிகாரமளிக்கும் திருத்த மசோதா பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவேயுள்ள சட்டங்களின்படி விசாரணைக்குப் பிறகுதான் தண்டனை அளிக்க அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா வாங்கியுள்ள குரூய்சர் கப்பல்

புதுடில்லி, ஏப். 24—
சமீபத்தில் இந்தியா வாங்கியுள்ள 8,000 டன் எடையுள்ள பிரிட்டிஷ் குரூய்சர் விலை ரூ 40 லட்சம் நவீன போர்க் கருவிகள் அதில் அமைக்கப்படுகிறது. இதற்காக மேலும் 80 லட்சம் செலவாகும்.

இதுபோன்ற புதிய குரூய்சர் விலை சுமார் ரூ 3 கோடியாகும்.

சாத்தியமில்லை!

புதுடில்லி, ஏப். 24—
"சர்க்கார் சிப்பந்திகளுக்கு ரயில் பிரயாணக் கட்டண சலுகை 1950ல் ரத்து செய்யப்பட்டது. இது மீண்டும் ஆரம்பிக்கப்பட மாட்டாதென்றே தெரியவருகிறது."

உத்திரப் பிரதேசத்தில் பள்ளிகள் உயர்வு!

1937-ம் ஆண்டுக்குமுன் உத்திர பிரதேசத்தில் ஒரு மாவட்டத்திற்கு உயர்நிலைப் பள்ளிகளும் இடைநிலைக் கல்லூரிகளும் சராசரி 6-தான் இருந்தன; இப்பொழுது இந்த எண்ணிக்கை 36-ஆக உயர்ந்துள்ளது.

1937-53-ஆண்டுகளின் இடையில் உள்ள காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளாகவும், இடைநிலைக் கல்லூரி தேர்வுகளுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை முறையே 432 சதவிகிதமாகவும், 1335 சதவிகிதமாகவும் உயர்ந்திருக்கிறது.

பாரிஸ், ஏப். 23—
ஜினிவா மாநாட்டில், சீனாவுக்கு முழு வல்லரசு அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று ரஷியா அனுப்பியிருந்த கோரிக்கையை மேற்கத்திய மூவல்லரசுகள் நிராகரித்துவிட்டன.

பல புதிய தொழில்களைத் துவங்க மே. வங்க முடிவு

அகதிகளுக்கு வேலை தர சேவாலை திட்டம்

கல்கத்தா, ஏப். 23—

நடுத்தர வயதுடைய அகதிகளுக்கு வேலை தருவதற்காக, அவர்கள் தங்கியுள்ள முகாம்களில் பல புதிய தொழில்களைத் துவங்குவதற்கு மேற்கு வங்க சர்க்கார் முன் வந்திருக்கிறது. திட்டத்திற்காகும் செலவில் 50 சத விகிதத்தை சர்க்கார் தருவது எனவும், மீதியை தனிப்பட்ட தொழில் அதிபர்கள் போட்டுக்கொள்வதெனவும் ஏற்பாடாகி இருக்கிறது.

நாடியா மாவட்டத்தில் உள்ள தாயெர்பூர் அகதிகள் முகாமில் சேவாலை ஒன்றை ஆரம்பிப்பதும் புதிய தொழில் ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டு இருக்கிறது.

புதுடில்லி, ஏப். 24—

இந்தியாவில் உள்ள பல்வேறு ரயில்வே பயிற்சி நிலையங்களில் தற்போது மொத்தம் 7,167 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மே. வங்கத்தில் ரூ. 9 கோடி செலவில் மின்சாரத் திட்டம்

—]o[—

கொழும்பு திட்டத்தின் மூலம் கனடா உதவுகிறது

புதுடெல்லி, ஏப். 23—

மேற்கு வங்கத்தில் மயூராட்சி நீர்ப்பாசன மின்சாரத் திட்டத்திற்கு மொத்தம் செலவாகும் தொகை ரூ. 15 8-கோடியாகும். இதில் சுமார் ரூ 9 7 கோடியை கனடா கொழும்பு திட்டத்தின் மூலம் கொடுத்து உதவுகிறது.

1951—52-ல் ஒரு கோடி டாலர் மதிப்புடைய கோதுமையை இந்தியாவிற்குக் கனடா கொடுத்திருக்கிறது. அக்கோதுமையை இந்தியாவில் விற்று, அதிலிருந்து கிடைக்கும் ருபாயைக் கொண்டு மயூராட்சி திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள கனடா ஏற்கெனவே ஒப்புதல் தெரிவித்தது.

1952—53-ல், 50 லட்சம் டாலர் மதிப்புள்ள கோதுமையை இந்தியாவிற்குக் கனடா கொடுத்தது. அதையும் விற்று, வரும் ருபாயை மேற்படி திட்டத்திற்குச் செலவிட்டுக்கொள்ள கனடா இப்பொழுது சம்மதித்து இருக்கிறது. இவ்வேற்பாடு கொழும்பு திட்டத்தைச் சேர்ந்ததாகும்.

இந்த மயூராட்சி நீர்த்தேக்க திட்டம் 1955—56-ல் முடிவுறும். இரு பருவத்திலும் சேர்ந்து 7,20,000 ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய வசதி இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும்.

மேற்கு வங்கத்தில் இப்பொழுது காணும் விளைச்சலைக் காட்டிலும் ரூ 8 கோடி மதிப்புடைய 4 லட்சம் டன் நெல் அதிகமாக விளையும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகையை இரண்டே ஆண்டில் நேர் செய்து விடக்கூடும்.

இத்திட்டத்தின் மின்சார உற்பத்தி ஏற்பாட்டினால் 20,000 கிலோ வாட், மின்சாரம் உற்பத்தியாகும் என்று கூறப்படுகிறது.

இராணிக்குத் தந்த வரவேற்பில் தமிழுக்கு இடமில்லை!

வேண்டுமென்றே செய்யவில்லையாம்— தவறுதலாக நடந்து விட்டதாம்!

இலங்கைப் பிரதமர் விளக்கம் தருகிறார்

கொழும்பு, ஏப். 24—

பிரிட்டிஷ் அரசி இலங்கைக்கு விஜயம் செய்தபோது இலங்கை பார்லிமெண்டில் அரசிக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும்தான் இந்த வரவேற்பு இருந்தது. தமிழ் இலங்கையின் மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருந்தும்கூட தமிழில் வரவேற்பு அளிக்கப்படவில்லை. இதுபற்றி இங்குள்ள இந்தியர்கள் பெரிதும் மன வருத்தம் அடைந்திருந்தனர்.

இலங்கைப் பிரதமர் இதுபற்றி குறிப்பிட்டதாவது:—

"வேண்டுமென்றே சர்க்கார் இப்படிச் செய்யவில்லை; அது தவறுதலாக நடந்துவிட்டது. சிங்களம், தமிழ் இரண்டும் அரசாங்க மொழிகள் என்பதே சர்க்காரின் முக்கியமான கொள்கை. அரசாங்க மொழி என்ற முறையில் தமிழுக்குரிய ஸ்தானம் எப்போதும் அளிக்கப்படும் என்று தமிழ் பேசுபவர்களுக்கு உறுதி கூறுகிறேன்."

கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகல்

1946-வது ஆண்டு முதல் 1953 ஜூலை முடிய நெல்லையில் கம்யூனிஸ்டு கட்சி முழு நேர ஊழியராகவும், 1949 முதல், 1953-ம் ஆண்டுவரை நெல்லை நகர கம்யூனிஸ்டு கட்சி டவுன் கமிட்டி, செக்ரடேரியட் உறுப்பினராகவும், 1½ ஆண்டு பாதுகாப்புக் கைதியாக சிறைவாசம் நடத்தியவரும், நெல்லைமாவட்ட கம்யூனிஸ்டு சதி வழக்கில் சர்க்காரால் ஈடுபடுத்தப்பட்டு விசாரணைக் கைதியாக 1 ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவரும், குற்றம் ருசுவாகாததால் கோர்ட்டாரால் விடுதலை செய்யப்பட்டவரும், கடந்த இரண்டு ஆண்டுகளாக நெல்லை மாவட்ட ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளராக பணி புரிந்தவரும், தற்சமயம் நெல்லை தொழிற்சங்க கவுன்சில் உறுப்பினருமான ஆர் கே. மூர்த்தி கீழ்கண்ட காரணங்களினால் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகுவதாக அறிவிக்கிறார்:—

"நெல்லை நகர கம்யூனிஸ்டு கட்சி தலைமை, கடந்த ஒரு ஆண்டு காலமாக தொழிற்சங்க ஜனநாயகத்தையும், உள் கட்சி ஜனநாயகத்தையும்மீறி, எதேச்சதிகாரப் போக்கில் செல்வதால் கட்சி அங்கத்தினராக இருப்பதிலிருந்து விலகுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்."

மறைவு

நாமக்கல் தோழர் வி எம். கந்தசாமி அவர்களின் சிறிய தந்தை தோழர் வி பழனியப்ப கவுண்டர் 21-4-54ல் இயற்கை எய்தியதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

கோதுமை விளைச்சல் பெருகியுள்ளது!

விலைகள் இறங்கக்கூடும்

புதுடில்லி, ஏப். 24—

இந்த ஆண்டில்; கோதுமை விளைச்சல், அளவில் மாத்திரமல்லாமல் தரத்திலுங்கூட, முந்திய ஆண்டிலிருந்ததைவிடப் பெரிதும் திருப்திகரமாக இருக்கிறது.

சென்ற பிப்ரவரி மாதத்தில் நிலவி வந்த ஆங்காங்கு மழை பெய்ததாலும், ஒருசில பிரதேசங்களில் கல்மாரி பெய்ததாலும் இந்த ஆண்டில் கோதுமை மகசூல் குறைந்து போய்விடக்கூடுமென்ற அச்சம் ஏற்பட்டிருந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்த மழையை அடுத்து நல்ல வெய்யில் அடித்ததால், பயிர்களுக்கு அதிகச் சேதம் ஏற்படவில்லை. தற்போதைய நிலவரத்திலிருந்து, நாட்டில் பொதுவாக கோதுமை விலை இறங்கக்கூடுமென்று தோன்றுகிறது.

மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு கிராம அபிவிருத்திதான் அடிப்படை

கிராம ஊழியர்கள் அச்சாணி போன்றவர்கள்!

பெங்களூர், ஏப் 24—

மொத்த ஜனத் தொகையில் 80 சதவிகித பேர் கிராமங்களில் வாழ்ந்து விவசாயத்தையே பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள இந்தியாவில் கிராமாபிவிருத்திதான் பிரதான பிரச்னை. இதனால்தான் 5-வருஷத் திட்டத்தில் விவசாயத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. தேசிய விஸ்தரிப்பு திட்டம் விவசாய அபிவிருத்திக்கு வழி செய்யும். அத்திட்டம் இந்திய கிராமாந்தர வாழ்க்கையின் சகல அம்சங்களுக்கும் பிரயோசனமாகக் கூடியது. உற்பத்திப் பெருக்கம், வேலை வாய்ப்பு, கல்வி போதனை, வாழ்க்கை வசதிகள் அபிவிருத்தி ஆகியவை எல்லாம் அதில் அடங்கியுள்ளன.

என்று மைசூர் விவசாய மந்திரி பெங்களூரில் தேசிய விஸ்தரிப்பு பயிற்சி நிலைய அதிகாரிகள் மாநாட்டை ஆரம்பித்து வைக்கையில் கூறினார்.

தேச மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு கிராம அபிவிருத்திதான் அடிப்படை என்றும், கிராம அபிவிருத்தி வேலைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முக்கிய பொறுப்பிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய கிராமங்களிலுள்ள மொத்த ஜனத் தொகையில் சுமார் கால் பங்கு பேர் உள்ள 1,20,000 கிராமங்களுக்கு அது முதல் கட்டத்தில் வியாபிக்கும்படி அத்திட்டம் வகுக்கப்பட்டது.

"கிராம ஊழியர்தான் இத்திட்டத்தின் அச்சாணி. கிராம வாழ்க்கையின் சகல அம்சங்களையும் நன்கு தெரிந்தவராக அவர் அமைவது அவசியம். கிராம மக்கள் அவர்பேரில் நம்பிக்கை கொள்ளும்படி அவர் செய்தால்தான் இத்திட்டம் நிறைவேறும். கிராம சமுதாயத்துடன் அவரும் ஒன்றுபட்டவராக இணைந்து வாழ்ந்தால்தான் அது சாத்தியமாகும். சாத்தியமான சகல விஷயங்களிலும் அவர் கிராம மக்களுக்கு ஆலோசனை கூறி வருவதுடன், அவர்களிடமிருந்து தாம் தெரியக் கூடியதையும் தெரிந்துகொள்ள வேண்டும். அவரிடம் சேவை உணர்ச்சி பரிபூரணமாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் தான் மக்கள் தயக்கமின்றி அவரிடம் ஆலோசனை கோருவார்கள். இத்தகைய பண்புள்ள கிராம சேவையாளரைத் தயார் செய்வது அவசியம்," என்றார் அவர்.

கழகச் செய்திகள்

★

சூரப்பள்ளியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, சொற்பொழிவு

சலகண்டபுரம், ஏப். 21—

17—4—54 அன்று மாலை 5-30 மணிக்கு, சூரப்பள்ளியில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழகக் கொடியை தோழர் ஏ. கோவிந்தசாமி ஏற்றிவைத்தார். தோழர் கு. சி. கந்தசாமி தலைமை வகித்தார். தோழர்கள் ப. கண்ணன், சித்தலி சுப்ரமணியம் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஏ. கோவிந்தசாமி பேச எழுந்ததும், பல தொழிற் சங்கங்கள், கிளைக் கழகங்கள் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன; சூரப்பள்ளி தி. மு. கழகம் வரவேற்பு மடல் வாசித்தளித்தது.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில், பிற்பட்ட வகுப்பினருக்கு மந்திரி பதவி கிடைத்துவிட்டதால் முன்னேற முடியாது என்றும், நிலப்பிரபுத்துவத்திற்கு பாதுகாப்பு கொடுக்கும் பூர்ஷ்வா காங்கிரஸ் ஆட்சி ஒழிந்து திராவிட நாடு திராவிடருக்கானால் தான், பிற்பட்ட வகுப்பினரின் வாழ்வு வளமாகும் என்றும் குறிப்பிட்டார்.

சூரப்பள்ளி ஓடையருகில் உள்ள ஏழைகளின் வீடுகளை அகற்றாமல் இருக்க அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், அவ்வூருக்கு பஞ்சாயத்து போர்டும், ஆரம்பப் பள்ளியும் அமைக்கும்படி அரசாங்கத்தை கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருங்காக்கோட்டையில் தி. மு. க. அமைப்பு

20—4—54ல், இராமநாதபுர மாவட்டம், திருப்புத்தூர் தாலுகா திருங்காக் கோட்டையில், தி. மு கழக அமைப்புக் கூட்டம் திருப்புத்தூர் தோழர் கா. முகம்மதலி தலைமையில் நடைபெற்றது. செயலாளர்:- சி. துரைராசா; துணைச்செயலாளர்: பெரி. க. சேது; பொருளாளர்: சி. கருப்பையா; மாவட்டப் பிரதிநிதி: பொ. தர்மலிங்கம்; செயற்குழு உறுப்பினர்கள்: சி. துரைராசா, பெரி. க. சேது, சி. கருப்பையா, பொ. தர்மலிங்கம், பே. எ. சின்னையா, வயி தங்கவேலு, அ. செல்லையா, செ. சுப்பையா, சுப. ஆண்டியப்பன், சி. அ. சின்னையா, ஆ. இராசமாணிக்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகத்தின் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தை தோழர் நெடுஞ்செழியன் அவர்களைக் கொண்டு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

துறையூர் தி. மு. கழகம்

20—4—54 இரவு 9½ மணிக்கு தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், திருச்சி என். சங்கரன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சின்னளப்பட்டியில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

19—4—54ல் சின்னளப்பட்டி வள்ளுவர் திடலில், ஓர் பொதுக் கூட்டம் தோழர் எஸ். டி. தாஸ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள், எஸ். முத்துகிருஷ்ணன், எம். வீரன்னா, ஏ. எம். டி. நாச்சியப்பன், எஸ். மெய்யப்பன், டி. ராசன், திருச்சி என். நெடுமாறன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சிறுமுளை தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்

17—4—54-ல், க. செகாதன் தலைமையில் இவ்வூர் தி. மு கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் தி செ. சிங்காரம் கழகக் கொள்கைகளைப் பற்றிப் பேசினார். தோழர் தெ. பிச்சமுத்து கழகக் கொடியை ஏற்றி வைத்து சொற்பொழிவாற்றினார்; அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் சுமார் 3 மணி நேரம் கழகப் போராட்டங்கள் பற்றியும், புதிய கல்வித் திட்டத்தைப் பற்றியும் பேசினார்.

சமால்பூர் தி. மு. கழகம்

ஆமதாபாத், ஏப். 23—

18—4—54ல், சமால்பூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் மாலை 4 மணிக்கு தோழர் இரா. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது, திருச்சி சங்கரன் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், மேலும் சில முடிவுகள் செய்யப்பட்டன.

நாகம்மையார் படிப்பகம்

இராமானுஜம்புதூர் நாகம்மையார் படிப்பகத்தின் 8வது ஆண்டு நிறைவு விழா 18—4—54 மாலை 7 மணிக்கு பம்பாய் தி. மு. கழகப் பணி மனையில் தோழர் க. ப. குமார் தலைமையில் நடைபெற்றது. கடந்த ஆண்டு வரவு-செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. தோழர் ஆர். ஏ. சுப்பையா நாகம்மையார் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். பின்னர், தோழர்கள் எம். கே. சபாபதி, சி. ஆறுமுக நயினார், எம். நடராசன் ஆகியோர் பேசினர்.

சீர்திருத்தத் திருமணம்

14—4—54ல், திருச்சி வரகனேரி கல்யாணியத்தில் தோழர் எம். என். மணி தலைமையில், தோழர் பி. அம்பிகாபதிக்கும்—தோழியர் சரோஜினி தேவிக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி புடையது—பொறுப்பாளர்.

நன்றி

"4—4—54ல் காலஞ்சென்ற என் அண்ணார் திரு என். சங்கரன் அவர்களின் மறைவு குறித்தும், 19—4—54ல் நடைபெற்ற அன்னாரின் நினைவுக்கல் நாட்டல் நிகழ்ச்சி குறித்தும் அனுதாபம் தெரிவித்த நண்பர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன் தனித் தனியே எழுதாததற்கு மன்னிக்கக் கோருகிறேன்" என்று, தோழர் என். சாம்பசிவம் (சாம்பு), அறிவிக்கிறார்.

காணவில்லை

சேலம் தாலுகா நாதம்பட்டி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ராமசாமி என்பவர் கீழ்க்கண்டவாறு அறிவிக்கிறார்.

கள்ளக்குடி அறப்போராட்டத்தில் கலந்துவிட்டு, சென்ற மூன்று மாதத்திற்கு முன் வீட்டிற்கு வந்துபோன எனது மகன் டி. ஆர். விசயநாதன் காணவில்லை. அவன் தம்பி இறந்துவிட்டான். 10—4—54 சேலத்திலிருந்து நடக்கும் கழுத்துப் போட்டியில் முதல் பரிசு கிடைத்திருப்பதாக தந்தி வந்துள்ளது. மகனைப் பார்க்கவும் கொண்டுள்ளோம் அவன் பதை அறிய வேண்டுகிறேன்.

ஐக்கிய தமிழகம் அமைக்க கோரிக்கை

மாகாண புனரமைப்பு குழுவிடம்

அ. இ. பொதுவுடைமைக் கட்சியின் மனு

தற்போது இந்தியாவிலுள்ள 29 மாகாணங்களுக்குப் பதிலாக மொழியை அடிப்படையாகக் கொண்ட 20 மாகாணங்கள் நிய மிக்கப்படவேண்டுமென்று மாகாண புனரமைப்புக் குழுவின ரிடம் அ. இ. பொதுவுடைமைக் குழு சமர்ப்பித்துள்ள மனு ஒன் றில் வற்புறுத்தியுள்ளது. இம்மனுவில் காணப்படும் 20 மொழி வழி மாகாணங்களாவன :—

தமிழ் நாடு, ஆந்திரா, கேரளம், கர்நாடகம், மகாராட்டிரம், குஜராத்தி, பஞ்சாபி, ஒரிசா, மேற்கு வங்கம், அசாம், ராஜஸ்தான், மத்தியபாரத், மத்தியபிரதேசம், டில்லி, இமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார், திரிபுரா, மணிபூர், காஷ்மீர், ஜம்மு.

தமிழ் நாடு:

"இப்போதைய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த கன்னட, மலையாளப் பகுதிகளை நீக்கிவிட்டு, ஆந்திராவில் அவசியமான எல்லை திருத்தங்களைச் செய்து, திருவாங்கூர் — கொச்சியைச் சார்ந்திருக்கும் தமிழ் பேசும் பகுதிகளை இணைத்து தமிழ் நாட்டை அமைக்க வேண்டும்," என்று மனு கூறுகிறது.

ஆந்திரா:

"இப்போதைய ஆந்திர மாகாணத்துடன் ஐதராபாத் மாகாணத்தின் தெலுங்கு, மொழிப் பகுதிகளையும், ஐதராபாத்கார் உட்பட்ட தெலிங்கானாப் பகுதியையும், மைசூர் மாகாணத்தில் தெலுங்கு பேசும் பகுதிகளையும் இணைத்து, தமிழ் நாட்டின் அவசியமான எல்லைத்திருத்தங்களைச் செய்து ஆந்திர மாகாணத்தை அமைக்கவேண்டும்," என்று, மனு கூறுகிறது.

கேரளம்:

"தற்போதைய திருவாங்கூர்-கொச்சி மாகாணத்தின் தமிழ்ப் பேசும் பகுதிகளை நீக்கிவிட்டு, சென்னை மாகாணத்தின் மலையாளப் பகுதிகளைச் சேர்த்து கேரள மாகாணம் அமைக்கப்பட வேண்டும்," என்று மனு கூறுகிறது.

மனுவில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"இப்போதைய ஐதராபாத் மாகாணத்தைப் பிரிக்காமல், தென்னாட்டில் மொழிவழி மாகாணங்களை அமைக்க முடியாது; ஏ, பி, சி, மாகாணங்களுக்கிடையே பாகுபாடுகளை ஒழித்து அரசப் பிரமுகர்கள் பதவிகளையும், அவர்களுக்கு அளிக்கப்படும் தனிச் சலுகைகளையும் கைவிட வேண்டும்; பெரும்பான்மை மக்கள் பேசப்படும் மொழியிலேயே அந்தந்த மாகாண நிர்வாகம் நடைபெற வசதி செய்யும் முறையில் இந்த யோசனை கூறப்பட்டுள்ளது; மொழிவாரி மாகாண அமைப்பினால், நாட்டின் ஒற்றுமை குலைந்துவிடும் எனும் வாதம் பொருளற்றதும், தவறுமாகும்; மாகாணங்கள் பொருளாதாரத் துறையில் சுயதேவை நிறைவுள்ளவைகளாக இருப்பதென்பது மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்குமிடையே பொது வருமானத்தை ஒதுக்குவதையே பொறுத்துள்ளது; இப்போது நிதி ஒதுக்கப்படும் முறையில் விளைவாக ஒரு மாகாணமாவது உபரி மாகாணமாகவோ, அல்லது தன்னிறைவு பெற்றதாகவோ இல்லாமல், எல்லா மாகாணங்களுமே பற்றாக்குறை மாகாணங்களாக இருந்துவருகின்றன அதுமட்டுமின்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமத்துவமற்ற பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருவதை யாரும் காணாமலிருக்க முடியாது!"

திருச்சி வானொலி நிலையம் இடம் பெயருகிறது

மதுரையில் நிர்மாணிக்க முடிவு

மதுரை, ஏப். 25—

திருச்சிராப்பள்ளியிலுள்ள அகில இந்திய ரேடியோ நிலையத்தை மதுரைக்கு மாற்ற இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

மதுரை நகருக்குத் தெற்கில் 5 கல் தொலைவில் உள்ள திருநகர் புதுமனைப்பட்டியில் வானொலி நிலையத்திற்கென சொந்தத்தில் பெரிய கட்டிடமொன்றைக் கட்ட இந்திய சர்க்கார் முடிவுக்கு வந்திருக்கிறதாம்.

இந்தத் தகவலை தமிழ் நாடு காங்கிரஸ் குழுவின் தற்காலத் தலைவராக இருக்கிற கலைராயர் அறிவித்துள்ளார்.

உள்ளிருப்பு வேலை நிறுத்தம்?

தொழிலாளர் தீர்மானம்

சென்னை, ஏப். 25—

21—4—54-ல் குரோம்பேட் சாந்தி நகர் மைதானத்தில், சென்னை சர்க்கார் கோச் பில்டிங் அண்டு டிரான்ஸ்போர்ட் தொழிலாளர் சங்கச் சார்பில், சங்கத் தலைவர் எஸ் எஸ். ராஜூ தலைமையில் நடந்த ஜெனரல் பாடி கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

1. 1953-54-ம் ஆண்டு வரவு செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

2 10—4—54-ல் டிரான்ஸ்போர்ட் கமிஷனரிடமிருந்து தங்கள் கோரிக்கைக்குப் பாதகமாக பதில் கிடைத்ததைக் கண்டு சட்டத்திற்குட்பட்டு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

தேசிய மாணவர் படைஎண்ணிக்கை

உயர்த்தப்படுமென அறிவிப்பு

பெண்கள் பகுதி விஸ்தரிப்பு

புதுடில்லி, ஏப். 24—

தேசிய மாணவர் படையின் மத்திய ஆலோசனைக் கமிட்டி நேரு தலைமையில் கூடி, தேசிய மாணவர் படையின் பெண்கள் பகுதியை விஸ்தரிக்க விசேட முயற்சிகள் செய்யப்பட வேண்டுமென்று சிபார்சு செய்தும், மாணவர் துணைப் படையின் தொகை 1954—55ல் 88,500-லிருந்து 2,60,000 ஆக உயர்த்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேசிய மாணவர் படையின் சீனியர் பிரிவில் துப்பாக்கிப் பயிற்சி போர்க்கள பயிற்சி முதலியவற்றைக் கற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. துணைப் படை உண்மையில் இளைஞர்களிடை ஒழுக்கமும், உடல் உறுதியும் ஏற்படுத்துகிறது.

தேசியத் திட்டக் கடன்

இரு பாங்குகள் முதலீடு

புதுடில்லி, ஏப். 24—

தேசியத் திட்டக் கடனுக்கு யுனைடெட் கமர்ஷியல் பாங்கி ரூ 2 கோடியும், பஞ்சாப் நேஷனல் பாங்கி லிமிடெட் ரூ $3\frac{1}{2}$ கோடியும் வழங்கியுள்ளது.

"ஆந்திர சர்க்கார் நடவடிக்கை அவசரப்பட்ட செயலாகும்"

மாநில புனரமைப்புக் குழுவினரிடம் மகஜர்

சென்னை, ஏப். 24

புதுடில்லி மாநிலங்கள் புனரமைப்புக் குழுத் தலைவரிடம் சென்னை தமிழ் வர்த்தக சபை சமர்ப்பித்துள்ள ஒரு மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது :—

தமிழ் மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்தின் பகுதிகளாக இருந்து, பின்னர் சித்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் தகராறிலுள்ள பகுதிகளாகிய ஏழு தாலுகாக்களை உடனடியாக எஞ்சியுள்ள சென்னை மாநிலத்தினிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், தகராறிலுள்ள இந்தப் பகுதிகள் பற்றிய முடிவு ஏற்படுவதற்கு முன்னாலேயே இந்தப் பகுதியில் ஒரு சர்வகலாசாலையைத் திறப்பதின் மூலம் இந்தப் பகுதிகளில் தங்கள் பிடிப்பை ஆந்திர சர்க்கார் பலப்படுத்திக்கொள்ளப் பார்ப்பது சரியல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

நம்புகிறீர்களா?

1951-ல் இருந்ததை விட, 1953-ம் ஆண்டு மத்தியில் உலக மக்கள் தொகை எண்ணிக்கை 3 கோடி அதிகரித்துள்ளது. இதே நிலைமையில் மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே போனால், இன்னும் 70 ஆண்டுகளில் இப்போது இருக்கும் எண்ணிக்கையைவிட இரட்டிப்பு மடங்கு அதிகமாகிவிடும்!

பொது உபயோக டெலிபோன் நிலையங்கள்

இந்தியாவில், காசு போட்டால் பேசக் கூடிய 2,258 பொது உபயோக டெலிபோன் நிலையங்கள் வேலை செய்து வருகின்றன. இவற்றில் 419 நிலையங்கள் சென்ற ஆண்டில் புதிதாக ஏற்படுத்தப் பட்டவையாகும்.

கவர்னர் நன்கொடை

சென்னை, ஏப். 24—

சென்னை கவர்னர், பழைய வண்ணாரப்பேட்டையிலுள்ள லால்குண்டாவில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்கு மக்களிடையே நிவாரண வேலைக்காக ரூ 250 நன்கொடையளித்தார்.

எதிர்ப்பு எச்சரித்தும் பயனில்லை!

அமெரிக்கக் கட்டில் இராக் சேர்ந்தது

பாக்தாத், ஏப். 25—

இராக் தேசத்துக்கு அமெரிக்கா இராணுவ உதவி அளிக்கும் என இராக் சர்க்கார் அறிவித்தது.

எவ்வித நிபந்தனையுமில்லாமல், இராக்குக்கு எவ்வித பொறுப்புமில்லாமல் இராணுவ உதவி அளிக்க அமெரிக்கா இப்போது சம்மதித்திருக்கிறது.

சமீபத்தில் இராக் மன்னர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார். அமெரிக்க இராணுவக் கட்டில் இராக்கைச் சேர்க்கக் கூடாது என எகிப்து ஏற்கெனவே கடுமையாக எச்சரித்திருக்கிறது.

ஆஸ்திரேலிய கம்பளியை ரஷ்யா இனி வாங்காது

பெட்ரோவ் சம்பவத்தால் விபரீதம்!

கான்பெர்ரா. ஏப். 25—

12,000 கல் தொலைவை இடைவெளியாகக் கொண்டுள்ள மாஸ்கோவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதுவராலயத்திலும், கான்பெர்ராவில் உள்ள ரஷ்யத் தூதுவராலயத்திலும் சேகரித்து வைத்திருந்த கடிதக் கட்டுகள் தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டன.

இரண்டு நாடுகளும் மற்ற நாட்டில் இருந்த தமது பிரதிநிதிகளை திரும்ப அழைத்துக் கொண்டதோடு, அரசியல் உறவுகளையும் அறுத்துக் கொண்டன.

ஆஸ்திரேலிய கம்பளியை ஜனவரியிலிருந்து இதுவரை சுமார் 60,000 பேல்களுக்கு ரஷ்யா கொள்முதல் செய்திருக்கிறது. இனி கம்பளியை வாங்குவதில்லை என ரஷ்யா முடிவுக்கு வந்திருப்பதாக வெளியேற இருக்கும் ரஷ்யத் தூதுவராலயத்தைச் சார்ந்த ஒருவர் கூறியுள்ளார்.

கப்பல் தொழில் ஊழல் பற்றி எழுந்த நம்பிக்கையின்மை!

(:)

ஜப்பான் சர்க்கார் பிழைத்துவிட்டது

டோக்கியோ, ஏப். 24—

கப்பல் கட்டும் தொழிலில் லஞ்சஊழல் சம்பந்தமாக ஜப்பான் சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை இரண்டு எதிர்க் கட்சியினரும் ஜப்பான் பார்லிமெண்டு கீழ்சபையில் கொண்டு வந்தனர். சர்க்காருக்கு ஆதரவாக 20 வாக்குகள் கூடுதலாகக் கிடைக்கவே தீர்மானம் தோற்றுவிட்டது.

லஞ்சஊழல் காரணமாக ஆளும் லிபரல் கட்சியைச்சார்ந்த மூத்த இரு பார்லிமெண்டு உறுப்பினர்களைக் கைது செய்ய உத்திரவிட்டதை கைவிடுமாறு பிரதமர், நீதிமந்திரி சென்னுக்கு கட்டளை பிறப்பித்தார். இதன் விளைவாக நீதி மந்திரி பதவியையேவிட்டுவிலகிவிட்டார்.

இந்த ஊழல் தொடர்பாக நூற்றுக்கணக்கான சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும் கைது செய்யப்பட்டு காவலில வைக்கப்பட்டுள்ளனர்.

ஆக்கிரமிப்புக்காரருக்கு இடந் தருவதா?

கராச்சி, ஏப். 25—

இந்தோ—சீனாவுக்குப் பிரெஞ்சுத் துருப்புகளை ஏற்றிச் சென்ற விமானங்கள் கராச்சியில் இறங்கி எண்ணெய் நிரப்பிக் கொள்ள பாக். சர்க்கார் அனுமதித்தது விசித்திரமாயிருக்கிறது" என்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கவுன்சில் மெம்பர் மீர் அலி ஆமத் ரான் கண்டிக்கிறார்.

"இந்தோ-சீனாவில் ஏகாதிபத்திய நாடுகள் நடத்தும் ஆக்கிரமிப்புக்கு நமது பூமியை உபயோகிக்க சர்க்கார் அனுமதித்தது வருந்தத் தக்கது" என்று அவர் தெரிவித்தார்.

சேலம் மாவட்ட தி. மு. கழக. 2-வது மாநாட்டுத் தொண்டர்களுக்கு

"மாநாட்டிற்கு வரும் தொண்டர்கள் முழு நேரத் தொண்டர்களாக இருக்க வேண்டும். மாநாட்டு நிகழ்ச்சிகள் வேலைகள் தவிர, நகரத்தில் நடக்கும் விளையாட்டு வேடிக்கைகள் பார்க்கச் செல்லக்கூடாது. அவர்களுக்குத் தொடர்ந்தாற்போல் வேலை தரப்படாமல் சில மணி நேரம் ஓய்வு கொடுக்கப்படும். ஓய்வு நேரங்களில் அவர்கள், தொண்டர்களுக்கென மாநாட்டுப் பந்தலுக்குள்ளேயே கட்டப்பட்டிருக்கும் அறையினுள் இருக்க வேண்டும். அந்தப் பந்தலை விட்டு வேறு எங்கும் போகக் கூடாது. தொண்டர்களுக்கு இலவசமாக உணவளிக்கப்படும். மாநாட்டு கட்டணம் கிடையாது அவர்களுக்குத் தனி அடையாளச் சின்னம் கொடுக்கப்படும், அச்சின்னத்தை எந்நேரமும் அணிந்து கொண்டிருக்க வேண்டும். தொண்டர்கள் எல்லோரும் 30—4—54ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கே மாநாட்டுப் பந்தலுக்கு வந்துவிட வேண்டும். கண்ணியம் தவறாமல், கட்டுப்பாடு குலையாமல், கடமை உணர்ச்சியுடன் ஒழுங்குடன் நடந்து கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நல்லவிதமாகப் பணியாற்றுபவர்களுக்கு 'நற்சாட்சிப் பத்திரங்கள்' வழங்கப்படும் தொண்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவர்களது கிளைக் கழகச் செயலாளர் கையெழுத்துடன், கழக முத்திரையுடன் தொண்டர்கள் அதே அனுமதி பத்திரத்தில் செயலாளர் முன்னிலையில் கையெழுத்திட்டு அத்தாட்சியுடன் வரவேண்டும்," என்று தொண்டர்படைத் தலைவர் இரா. தாண்டவன் அறிவிக்கிறார்.

உணவுப் பொருளில் கலப்படம்

ஒரு வாரத்தில் 38 வழக்குகள்

சென்னை, ஏப். 25—

ஏப்ரல் 3-ந் தேதியுடன் முடிவடைந்த ஒரு வாரத்தில் மட்டும் உணவுக் கலப்பட தடைச் சட்டத்தின்கீழ் 38 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளில் ரூ 702 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

சோழவந்தான் அண்ணா படிப்பகம்

18—4—54 காலை $8\frac{1}{2}$ மணிக்கு அண்ணா படிப்பகம் தோழர் நா. ஆவுடையப்பன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— பொ சௌந்தரபாண்டியன் செயலாளர்: ஜி எஸ். மணி துணைச் செயலாளர்; பொ. குருசாமி பொருளாளர்: மு குருசாமி, சத்திவேல் விளம்பர உறுப்பினர்கள்; மற்றும் 11 பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குடிநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,